**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ம் நாள் வெள்ளிக்கிழமை**

**IA.1/2024**

**in**

**HMOP.113/2024**

**(CNR.No.TNVP02-001766-2024)**

சந்தானலட்சுமி .... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

குமாரவேல் .... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனு 04.10.2021 அன்று விழுப்புரம முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 07.10.2021 அன்று இ.ம.எண்.50/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் ஏ.நெ.593/2017 நாள் 24.07.2023 தேதியிட்ட உத்தரவு படி திருக்கோவிலூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இ.ம.எண்.2/2023 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் மீண்டும் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் ஏ.நெ.327/2020 நாள் 16.04.2024 தேதியிட்ட உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் இ.ம.எண்.1/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் கடந்த 31.10.2025 அன்று என் முன்பு இறுதியாக

விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/மனுதாரரால் இம்மனு பிரிவு 157 சி.பி.சி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அதனை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்துக்கொள்ள பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் அசல் மனுவில் மனுதாரர் என்றும் எதிர்மனுதாரருக்கு எதிராக விவகரத்து மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் பெற்றோரால் வழங்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் பிற பொருட்கள் எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்றும் அந்த நகைகள் மற்றும் பொருட்களைத் திருப்பித் தருவதற்காக இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 27ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்கண்ட மனு தாக்கல் செய்யப்பட்டபோது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தற்போது கிடைக்கப்பெற்ற சில ரசீதுகள் மேற்படி மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் எனவே மேற்கண்ட மனுவுடன் சரியான நேரத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மேற்கண்ட மனுவில் தனது வழக்கிற்கு மிகவும் பொருத்தமானவை,

முக்கியமானவை என்றும் எனவே நீதியின் நலனுக்காகவும் இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும் இல்லையேல் தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு மற்றும் கஷ்டங்களும் ஏற்படும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-

மேற்படி வழக்கில் மனுதாரர் ஆவணங்களை ஏற்றுககொள்ள தாக்கல் செய்துள்ள மேற்படி மனு முற்றிலும் உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனு எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்ய உகந்தது என்றும் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.05.2016ம் இந்து சாஸ்திர சம்பிரதாயப்படி இருவீட்டு பெரியவர்கள், உறவினர்கள் முன்னிலையில் திருக்கோவிலூர் மார்க்கெட் வீதியில் உள்ள ராதா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்பது மட்டில் உண்மை என்றும் திருமணத்தின் போது மனுதாரருக்கு அவரது பெற்றோர் வீட்டில் சுமார் 70 சவரன் தங்க நகைகளும், வீட்டு உபயோகப் பொருட்களுக்காக சுமார் ரூ.70,000/- ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது என்பதும், மேலும் இரு சக்கர வாகனம் வாங்க ரூ.90,000/- கொடுக்கப்பட்டது என்பதும், திருமணத்திற்கு முதல் நாள் இரவு ரூ.3,00,000/- எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் கொடுக்கப்பட்டது என்பதும், திருமண செலவுகள் அனைத்தும் மனுதாரர் பெற்றோர் வீட்டில் செய்தார்கள் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் திருமணத்திற்கு பிறகு ஒரு சில மாதங்களே எதிர்மனுதாரர் மனுதாரருடன் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்தார் என்பதும், அதன் பின்னிட்டு எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் கூடுதல் வரதட்சணைக்கேட்டு அடித்து, கொடுமைப்படுத்தி வந்தார்கள் என்பதும், மனுதாரர் அவரது

பெற்றோர்களிடம் அவ்வப்போது கேட்ட வரதட்சனையை வாங்கிக்கொடுத்து வந்தார் என்பதும், கடந்த 10.11.2016ம் தேதி எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் கூடுதல் வரதட்சணைக் கேட்டு மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு துரத்திவிட்டார்கள் என்பதும், மேலும் எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ பல்வேறு முயற்சிகள் செய்தபோதும், எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் கேட்ட வரதட்சணைக் கொடுத்தால்தான் சேர்ந்து வாழ முடியும் என கண்டிப்புடன் கூறிவிட்டார்கள் என்பதும் உண்மையல்ல என்றும் மேற்படி அம்சங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பாக கூறப்பட்டுள்ளது என்றும் மேலும் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள நகைகள் எதிர்மனுதாரர் வசம் உள்ளதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மனுதாரருக்கு பாத்தியமான எந்தவிதமான நகைகளும் எதிர்மனுதாரர் வசம் இல்லை என்றும் மேலும் மனுதுாரர் எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏறுப்படுத்த வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக IA.1/2019 மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் திருமணத்தின் போது எதிர்மனுதாரரின் பெற்றோர் கேட்டுக்கொண்டதன் பேரில் மனுதாரர் பெற்றோர் நிச்சயதார்த்தத்தின் போது எதிர்மனுதாரருக்கு 5 பவுன் டாலர் செயின், 4 1/2 பவுன் டாலருடன் சேர்ந்த கை செயின், 1/2 பவுன் மோதிரமும் சீர் வரிசையாக கொடுத்துள்ளனர் என்பதும், மேலும் திருமணத்தின் போது எதிர்மனுதாரர் பெற்றோர் வற்புறுத்தி கேட்டதன்பேரில் மனுதாரரின் பெற்றோர் 2 ஆரம் 14 பவுன், 2 நெக்லஸ் 8 பவுன், 3 பாப்பா செயின் டாலர் 5 பவுன், 6 வளையல் 12 பவுன், 2 பெரிய மாட்டல் 1 பவுன், மாப்பிள்ளை குருமாத் டாலர் 5 பவுன், மாப்பிள்ளை குருமாத் 2 பவுன், 2 மோதிரம் 1 பவுன், தோடு ஜிமிக்கி செட்டு 2 பவுன், காசு மாலை 7 பவுன், பெண்ணுக்கு குருமாத்து 3 பவுன், கல் வைத்த தோடு, ஜிமிக்கி மாட்டல் 1 1/2 பவுன், தோடு, ஜிமிக்கி மாட்டல் 2 பவுன், பெண் கழுத்தில் செயின் டாலர் 1 1/2 பவுன், ஆக கூடுதல்

70 பவுன் நகை சீர்வரிசையாக அளிக்கப்பட்டது என்பதும், மேலும் இதர நகைகள் திருமணத்தின் போது சீர்வரிசையாக வழங்கப்பட்டது என்பதும், மேலும் திருமணத்தின் போது சீர்வரிசை பொருட்களாக ரூ.70,000/-த்திற்கு வாங்கி கொடுக்கப்பட்டது என்பதும் உண்மையல்ல என்றும் இருச்ககர வாகனம் வாங்க ரூ.87,000/- மட்டில் எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்றும் மேற்படி தொகை வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது என்றும் மேலும் திருமணத்திற்கு முதல் நாள் இரவு ரூ.3,00,000/- எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் கொடுக்கப்பட்டது என்பதும், மனுதாரரின் பெற்றோர் பெறும் செலவு செய்து தங்களின் மகளின் திருமணத்தினை வெகு விமர்சியாக செலவுகள் செய்து திருமணம் செய்து வைத்தனர் என்பதும் உண்மையல்ல என்றும் மேற்படி அம்சங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி அம்சங்களை எதிர்மனுதாரர் குறிப்பாகவும் திட்டவட்டமாகவும மறுதளிக்கிறார் என்றும் மேற்படி அம்சங்களை மனுதாரர் குறிப்பாக நிரூபிக்க கடமைப்பட்வர் என்றும் மனுதாரருக்கு அவரது பெற்றோர் விருப்பப்பட்டு திருமணத்திற்கு பின்பு 15 நாட்கள் கழித்து மனுதாரருக்கு அவரது பெற்றோர் மரக்கட்டில், மரபீரோ, ஷோபா, வாஷிங்மிஷின், குளிர்சாதனபெட்டி, மற்றும் குடும்பம் செய்ய தேவையான ரூ.10,000/- எவர்சில்வர் பாத்திரம் அவர்களாகவே விருப்பப்பட்டு வாங்கிகொடுத்த மேற்கண்ட பொருட்கள் மட்டுமே எதிர்மனுதாரர் வீட்டில் உள்ளது என்பதை குறிப்பாக ஐ.ஏ.1/2019 மனுவில் மனுவிற்கான ஆட்சேபனையை தெரிவித்துள்ளார் என்றும் மேற்படி வழக்கில் இத்துடன் மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சம்மந்தமாக ஐ.ஏ. 1/2019 மனுவில் தெரிவிக்காமல் தற்போது வழக்கிற்கென்றே மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஜோடித்து தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கில் இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சம்மந்தமாக ஐ.ஏ.1/2019 மனுவில் தெரிவிக்காமல் தற்போது வழக்கிற்கென்றே மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஜோடித்து தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி

வழக்கில் இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சம்மந்தமாக ஐ.ஏ.1/2019 மனுவில் தெரிவிக்காத காரணத்தினால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆதலால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளாமல் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர மனுதாரர் மனுவில் கண்ட அம்சங்களை குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மறுதளிக்கிறார் என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. <u>தீர்வுக்கான பிரச்சினை :-</u>**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. <u>தீர்வு :-</u>**

மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், மனுதாரர் இந்து திருமண சட்ட பிரிவு 27ன் மனு தாக்கல் செய்தபோது இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப்பெறாததால் அதனை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் தற்போது கிடைக்கப்பெற்ற

ரசீதுகளை இம்மனுவுடன் தாக்கல் செய்வதாகவும் எனவே, இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து மனுவில் கண்ட ஆவணங்களை மேற்படி இந்து திருமண சட்ட பிரிவு 27ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில் மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சம்மந்தமாக ஐ.ஏ.1/2019 மனுவில் தெரிவிக்காமல் தற்போது வழக்கிற்கென்றே மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஜோடித்து தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சம்மந்தமாக ஐ.ஏ.1/ 2019 மனுவில் தெரிவிக்காத காரணத்தினால் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆதலால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளாமல் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

8. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இந்து திருமண சட்டப் பிரிவு 27ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஐ.ஏ.2/2024 மனு தாக்கல் செய்தபோது இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்பது தெரிகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சாட்சியமாக ஏற்க இயலுமா, அது தொடர்புடையதா போன்ற வினாக்கள் அந்த ஆவணத்தை சான்றாவணமாக குறியீடு செய்யும்போது தான் கேட்க இயலும். தற்போது மனுதாரர் அந்த ஆவணங்களை மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் அந்த காலதாமதத்தை மன்னித்து ஏற்க இயலுமா என்பது தான் கேள்வி. மேற்படி சங்கதிகள் மற்றும்

சூழ்நிலையை பரிசீலனை செய்து பார்க்கும்போது இது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **பிபின் சாந்திலால் //எதிர்// ஸ்டேட் ஆப் குஜராத்** என்ற வழக்கில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்களை பெற்றுக்கொண்டு அந்த ஆவணம் வழக்கிற்கு தேவையானதா? இல்லையா? என்பதனை தீர்ப்பு பகரப்படும்போது விளக்குவது சால சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளபடுகிறதே தவிர அவைகளை வழக்கு ஆவணங்களாக குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும்போது அதன் தன்மை குறித்து அது குறியீடு செய்யப்பட வேண்டுமா? இல்லையா? என்பது முடிவு செய்யப்படும். எனவே மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின்பால் உகந்தது என்று கருதியும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்படுகிறது. மனுவில் கண்ட ஆவணங்கள் அதன் மெய்ப்பிக்கும் தன்மை மற்றும் பொருத்தமுடைய தன்மைக்கு உட்பட்டு ஏற்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 21.11.2025 இன்று பகரப்பட்டது.

M S VARALAKSHMI

Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும சான்றாவணம் :-**

(இல்லை.)

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

M S VARALAKSHMI
Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.